Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 19, 2023

திங்கட்கிழமை 19 ஜூன், 2023 | ஒளி: 09 கதிர்: 021 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ | FREE

## எம்.பியின் தம்பி கைது

■ ஷேன் செனவிரத்ன

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல் ஹலீமினின் இளைய சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## சிங்கள –பௌத்த பேரினவாதம் கோரமுகத்தை காட்டிவருகிறது

### சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

■ க. அகரன்

சிங்கள- பௌத்த பேரினவாதத்துடன் கலக்கும் முயற்சிகளை மேலாதிக்க சக்திகள் மேற்கொள்கின்றன எனத் தெரிவித்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் ந. சிவசக்தி ஆனந்தன், சிங்கள பௌத்த பேரினவாதம் மீண்டும் தனது கோரமுகத்தை தமிழர்கள்மீது காட்டிவருகிறது என்றார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க. பத்மநாபாவின் 33ஆவது நினைவு தினம் திங்கட்கிழமை (19) அனுஷ்டிக்கப்படுகிறது. இந்நிலையில், அவர் வெளியிட்டுள்ள ஊடாக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டம், 2009இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில்,

தொடர்ச்சி P2



ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு

## தலைவர் இல்லை; ஐவரும் இணைத்தலைவர்கள்

■ க. அகரன்

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு தலைவர் இல்லை எனவும், கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் இணைத் தலைவர்களாகவே செயற்படுவார்கள் எனவும் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# மொட்டு வாடவில்லை; மொட்டில் வெல்வோம்

**அழிவுப் பயணத்தில் எந்த நாளும் பயணிக்காது**

**நாட்டை அபிவிருத்தி செய்வதே இலக்கு**

**வாக்களிக்கத் தவறியவர்கள் வாக்குக் கேட்கின்றனர்**

**மிரட்டல்களுக்கு பயந்து கட்சியை விட்டு விலக மாட்டார்கள்**

**மொட்டு வாடவில்லை; மொட்டில் நாம் வெற்றி பெறுவோம்**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாட்டுக்கு விரோதமான, அழிவுகரமான பயணத்தை மேற்கொள்ளாது எனத் தெரிவித்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தான் பிறந்த நாட்டின் வளர்ச்சியைத் தவிர, வேறு எந்த நிகழ்ச்சி நிரலும் தனது கட்சிக்கு இல்லை என்றார்.

தொடர்ச்சி P2





## ரணிலின் தொலைநோக்கு நாடுகளை விட விசாலமானது

வீழ்ச்சியடைந்த நாட்டை மிகக் குறுகிய காலத்தில் உயரத்தில் தூக்கி வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்கு பார்வையானது இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளை விட விசாலமானது என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 21 இளநீர் காய்களை பார்த்த பெண் மரணம்



21 இளநீர் காய்களைப் பார்த்த 48 வயதான பெண்ணொருவர் மயங்கிவிழுந்து மரணமடைந்த சம்பவமொன்று லக்கல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாஸ்கிரிய எனுமிடத்தில் சனிக்கிழமை (17) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## தேங்காய் எண்ணெய் விலை ரூ.1,000



பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட ஒரு குழுவினர், உள்ளூர் சந்தையில் தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்க வழி வகுத்துள்ளனர் என தேசிய நுகர்வோர் உரிமைகள் காப்பக அமைப்பு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## இ.போ.ச பஸ்களில் இனி நடத்துநர் இல்லை



இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் அதிவேக நெடுஞ்சாலைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களில், நடத்துநர் இன்றி சேவைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “குறைத்தால் குறைப்போம்”

பேக்கரி உற்பத்திகளுக்கான மூலப்பொருட்களான முட்டை மற்றும் கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டால் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை குறைக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்க தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு

## மீண்டும் நிதி கேட்க ஆணைக்குழு முஸ்தீபு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதியைக் கோரி, திறைச்சேரியின் செயலாளருக்கு மீண்டுமொரு கோரிக்கை கடிதத்தை அடுத்தவாரம் அனுப்பிவைப்பதற்கு தான் தீர்மானித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## எய்ட்ஸால் காலாண்டில் 15 பேர் உயிரிழப்பு




கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இந்த வருட காலாண்டில் எய்ட்ஸ் தொற்றுக்கு உள்ளான தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தேசிய பாலியல் நோய்/ எய்ட்ஸ் தடுப்பு வேலைத்திட்ட திணைக்களத்தின் புள்ளிவிவரத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சில பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

ஐக்கிய அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாயின் பெறுமதி கடந்த சில நாள்களாக வீழ்ச்சியடைந்துள்ளன. இதனால், பொருட்களின் விலைகள் சந்தையில் உடனடியாக அதிகரித்துள்ளன.

தொடர்ச்சி P2



## ‘வாகீர்’ வருகிறது

இந்திய கடற்படையின் சமீபத்திய கல்வாரி வகை நீர்மூழ்கிக் கப்பலான ‘வாகீர்’, சர்வதேச யோகா தினத்தின் (IDY) ஒன்பதாவது பதிப்பை நினைவுகூரும் வகையில், 19-22 ஜூன் 2023 வரை கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளது. நீர்மூழ்கிக் கப்பலின் வருகையின் போது, பார்வையாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்காக கப்பல் திறக்கப்படும்.

## பம்பரகந்த நீர்வீழ்ச்சியில் பல்கலைக்கழக மாணவன் பலி



பேராதனை பல்கலைக்கழகத்தின் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் பம்பரகந்த நீர்வீழ்ச்சிக்கு முன்பாக உள்ள நீர்க் குழியில் விழுந்து உயிரிழந்துள்ளதாக ஹல்துமுல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## 3 சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகின

மின்சார விநியோகம், எரிபொருள், வைத்தியசாலை ஆகிய மூன்று சேவைகளும் அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சிங்கள –பௌத்த பேரினவாதம் கோரமுகத்தை காட்டிவருகிறது

சிங்கள -பௌத்த பேரினவாதம் மீண்டும் தனது கோரமுகத்தை தமிழர்கள் மீது காட்டிவருகிறது.

2009ஆம் ஆண்டுவரை வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்றுக்கொண்டு தமிழர்களுக்கெதிரான ஒவ்வொரு வன்முறையிலும் அவர்களை அங்கு அனுப்பிவிட்டு, இப்பொழுது எமது தாயகப் பிரதேசத்திலிருந்தும் எம்மை விரட்டும் அல்லது சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் கலக்கும் முயற்சிகளை மேலாதிக்க சக்திகள் மேற்கொள்கின்றன.

நாம் இப்பொழுது சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்பவர்களாக உள்ளோம். இந்த நிலையில் எமது இருப்பைத் தக்க வைக்க வேண்டுமாக இருந்தால், நாம் எமது குறுகிய கட்சிசார் அரசியல் நலன்களை முன்னிறுத்தாமல், எமது வருங்கால சந்ததி அச்சமின்றி, தமது தாயகப் பிரதேசத்தில் சகல உரிமைகளுடன் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது எம் அனைவரதும் தலையாய கடமையாகும்.

பல்வேறு காரணங்களுக்காக நாம் தனித்தனி அரசியல் கட்சிகளாக மக்கள் சேவை ஆற்றலாம். ஆனால், எமது ஒட்டுமொத்த நோக்கம் அரசியல் கட்சிகளைச் சார்ந்த நாமும் பாதிக்கப்பட்டவர்கள்தான் என்பதை உணர்ந்து, எமது இனத்தின் சமத்துவ சகவாழ்விற்காக உழைப்பதாகவே இருக்க வேண்டும்.

எமது செயலாளர் நாயகம் தோழர் க. பத்மநாபா சொன்னதைப் போன்று "நாம் மக்களுக்காகவே மண்ணை நேசிப்பவர்களா இருக்க வேண்டும்" என்பதன் அதனடிப்படையில் அவரின் மற்றொரு கூற்றின்படி, "ஐக்கியம் என்னும் தளத்தில் நின்று இறுதி வெற்றிவரை உறுதியுடன் போராடுவோம்" என்ற முழக்கத்தை முன்வைத்து நாம் அனைவரும் ஐக்கியமாக எமது இலட்சியமான தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்று, எம்மினத்தை அழிவிலிருந்து காக்கவேண்டும் என்பதை 33ஆவது தியாகிகள் தினமான இன்றையதினத்தில் (19) ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சபதமேற்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## எம்.பியின் தம்பி கைது

டுபாயில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக தெரிவித்து பல்வேறு நபர்களிடம் இருந்து நிதி மோசடி செய்தமை தொடர்பில் கிடைத்த மூன்று முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

டுபாயில் வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாகக் கூறி, இரண்டரை இலட்சம் ரூபாய், ஒரு இலட்சம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் என மூவரிடமும் நிதியைப் பெற்றுள்ளார். மோசடிக்கு முகங் கொடுத்தவர்கள் கலகெதர, அக்குறணை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அவர்கள் மூவரும் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே இவர் கைது செய்யப்பட்டார். இந்த மூவருக்கும் டுபாய் விசாக்களை வழங்கியுள்ளார்.

இதுதொடர்பில் டுபாய் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு தேடியறிந்த போது, அந்த மூன்று விசாக்களும் போலியானவை என்பதும் தெரியவந்துள்ளது. விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மொட்டு வாடவில்லை; மொட்டில் வெல்வோம்

எதிர்க்கட்சிகள் உருவாக்கும் பொய்யான பலிகடாக்களுக்கு அஞ்சாமல் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

உடகம்பல ரெஜி ரணதுங்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை (17) நடைபெற்ற கம்பஹா மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வழிநடத்தல் குழுவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:

எதிர்க்கட்சிகள் தேர்தலுக்காக முழக்கமிடுகின்றன. தேர்தல் நடக்காவிட்டால் கொழும்பு முற்றுகையிடப்படும் என்கிறார்கள். வெகு சிலரே அதற்கு வந்திருப்பதை தொலைக்காட்சியில் பார்த்தேன். அவர்கள் வேடிக்கைக்காகச் செய்யும் காரியம் என்று நினைக்கிறேன்.

மூன்று சதவீதமான சகோதரர்கள்தான் தேர்தலுக்காக அதிகம் சத்தம் போடுகிறார்கள். அவர்களின் வரலாற்றைப் பாருங்கள். ஜே.வி.பியின் வரலாற்றில் அதிகம் செய்த காரியம் தேர்தலைத் தவிர்த்ததுதான். ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதாக சஜித் கடைசி நிமிடத்தில் அறிவித்தார்.

இந்த இருவருக்குமே அடிமட்ட அரசியல் கூடத் தெரியவில்லை. கூட்டத்தைக் கண்டவுடன் இருவரும் குதூகலமடைந்தனர். நடைமுறை அரசியல் என்பது ஊடகங்களுக்கு முன்னால் ஒரு நிகழ்ச்சியை நடத்துவது போல் எளிமையானது அல்ல!

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. இப்படியான நேரத்தில் தேர்தலுக்குச் சென்றால் பிரச்சினைகள் இன்னும் மோசமாகும். இந்த உண்மையைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் ஆட்சியைப் பிடித்து நாட்டைக் கட்டியெழுப்புவார்கள் என்று நம்ப முடியுமா என்றும் வினவினார்.

வேறொரு நாட்டில் உள்ள எதிர்க்கட்சி, நெருக்கடியை தீர்க்க அரசாங்கத்திற்கு உதவுகிறது. ஆனால், நம் நாட்டில் எதிர்க்கட்சிகள் மக்களின் இதயங்களில் ஒரு பொய்யான மாயைத் தோற்றத்தை உருவாக்கி, அரசாங்கத்தின் முன்னேற்றத்தைத் தடுக்கின்றன. அரசியல் செய்யும் போது அரசியல் செய்வோம்.

நாங்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை மிகவும் கடின உழைப்புடன் கட்டியெழுப்பினோம். சவால்களுக்கு பயந்து நாங்கள் ஓடுவதில்லை. எங்கள் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. எவ்வளவோ துன்புறுத்தல்கள் வந்தாலும், நாங்களும், எங்கள் கட்சிக்காரர்களும் இன்னும் மொட்டிலேயே இருக்கிறோம். தேர்தல் வந்தால் மீண்டும் நாங்கள்தான் ஆட்சி அமைப்போம் என்றார்.

சமீப காலமாக நாங்கள் சற்று அமைதியாக இருந்தோம். மொட்டு வாடிவிட்டதாக எதிர்க்கட்சியினர் நினைத்தனர். அது அவர்களின் தவறு. அப்போது கட்சி என்ற ரீதியில் எங்களின் தவறுகளையும் குறைகளையும் சுயவிமர்சனம் செய்தோம். திறமையான மாலுமிகள் புயல் மிகுந்த கடலில் பிறக்கிறார்கள், அமைதியான கடலில் அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

இப்போது நாம் முன்னரை விட பலமான சக்தியாக இருக்கிறோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தலுக்கு பயந்து ஓடாது. ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் அதற்கு நாங்கள் தயார். உள்ளூராட்சி தேர்தல் நடத்தினால் அதற்கும் தயாராக இருக்கிறோம். எந்த நேரத்திலும் தேர்தலை சந்திக்க எங்கள் கட்சி தயாராக உள்ளது.

நாம் பிறந்த நாடுதான் எங்களுக்கு முதன்மையானது. நாட்டை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சி நிரலைத் தவிர வேறு எந்த நிகழ்ச்சி நிரலும் எங்களிடம் இல்லை. மஹிந்த ராஜபக்ஷ சவால்களை முறியடித்த தலைவர். அத்தகைய தலைவரின் நிழலில் உருவான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்த நாட்டை அழிக்கும் பாதையில் செல்லாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்திற்கு நாம் அதிகபட்ச ஆதரவை வழங்குகிறோம். எங்களுக்கும் அவருக்கும் இடையே எந்தப் பிரச்சினையும் இல்லை. ஜனாதிபதியுடன் இணைந்து நாட்டை விற்பதாக எதிர்க்கட்சியினர் பொய்களை உருவாக்கி வருகின்றனர். பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், நாட்டை முன்னேற்ற வழி காணவும் அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். எனவே, எதிர்க்கட்சிகள் உருவாக்கும் சூழ்ச்சிக்குள் மக்கள் வீழ்ந்து விட வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

## தலைவர் இல்லை; ஐவரும் இணைத்தலைவர்கள்

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிர்வாகத் தெரிவு மற்றும் யாப்பு திருத்தம் தொடர்பில் இறுதித் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக குறித்த கட்சியின் நிறைவேற்றுக் குழு கூட்டம் வவுனியா, இராண்டாம் குறுக்குத்தெருவில் உள்ள விருந்தினர் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (18) இடம்பெற்றது.

இதில், டெலோ அமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமசந்திரன், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் சிறிகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் உட்பட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் 15 பேர் கலந்து கொண்டனர்.

இதன்போது, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டுமென டெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் யோசனையை முன்வைத்தனர்.

அந்த யோசனைகளுக்கு கடுமையான விமர்சனத்தை முன்வைத்த தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி சிறிகாந்தா, தலைவர் வேண்டாம் எனவும் ஐந்து கட்சிகளின் தலைவர்களும் இணைத்தலைவர்களாக தொழிற்பட வேண்டுமென வாதிட்டு தனது கருத்தை முன்வைத்தார். இறுதியில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு தலைவர் ஒருவர் இல்லை எனவும், கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கட்சியின் இணைத்தலைவர்களாக செயற்படுவர் எனவும் நிறைவேற்றுக் குழுவில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## "குறைத்தால் குறைப்போம்"

அதற்கமைய, முட்டை ஒன்றின் விலை 35 ரூபாயாகவும் கோதுமை மாவின் விலை 180 முதல் 170 ரூபாய் வரை குறைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள கோதுமை மா இறக்குமதியை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## 21 இளநீர் காய்களை பார்த்த பெண் மரணம்

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: அப்பிரதேசத்தில் உள்ள வீடொன்றில், வெள்ளிக்கிழமை (16) மாலை முதல், சனிக்கிழமை விடியற்காலை வரையிலும் விசேட பூஜைகள் (சாந்தி கர்ம) நடத்தப்பட்டுள்ளன.

சுகவீனமடைந்த நிலையில் இருந்த பெண்கள் இருவர் மற்றும் ஆண்ணொருவருக்கே இவ்வாறு பூஜைகள் செய்யப்பட்டன. பூஜைகளை செய்துகொண்டிருந்த நபர், அவ்வப்போது அந்த மூவருக்கும் 21 இளநீர் காய்களைக் காண்பித்து தொட்டு கும்பிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அம்மூவரும் அவ்வாறே செய்தும் உள்ளனர்.

21 இளநீர் காய்களைக் காண்பித்துக் கொண்டிருந்த போது, அதிலொரு பெண் திடீரென சுகவீனமடைந்துள்ளார். அந்தப் பெண்ணுக்கு மஞ்சள் நீரை பருகக் கொடுத்துள்ளனர். எனினும், சுகமடையவில்லை. இதையடுத்து வைத்தியசாலைக்குச் கொண்டு சென்றுள்ளனர். அங்கு அப்பெண் மரணமடைந்துவிட்டார்.

இந்த பூஜை வழிபாடுகளைச் செய்ததாகக் கூறப்படும் கல்கிரியாகமவைச் சேர்ந்த 25 வயதான நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ரணிலின் தொலைநோக்கு நாடுகளை விட விசாலமானது

காலி மாவட்டத்தின் பத்தேகம மற்றும் அக்மீமன தொகுதிகளின் அதிகார சபைக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

வீழ்ச்சியடைந்த தேசத்தை மீண்டும் கட்டியெழுப்பி, உலகத்துடன் முன்நோக்கி கொண்டு செல்ல ரணில் விக்கிரமசிங்கவுக்கு முடியும் என்றும் தெரிவித்தார்.

ஒரு வருடத்திற்கு முன்னர் முற்றாக வீழ்ச்சியடைந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்று உலகத்திற்கு முன்னுதாரணத்தை வழங்கினார். நாடு தற்போது சரியான வழியில் பயணித்துக்கொண்டு இருக்கின்றது என்றார்.

இலங்கையை போன்று பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான உலகில் வேறு நாடுகள் இன்னும் எழுந்திருக்க முடியாத நிலைமையில் இருக்கும் போது, ஜனாதிபதி சரியான நோக்கு காரணமாக நாடு கட்டியெழுப்பட்டுள்ளது எனவும் வஜிர அபேவர்தன மேலும் கூறியுள்ளார்.

## இ.போ.ச பஸ்களில் இனி நடத்துநர் இல்லை

அதனடிப்படையில், இந்த நடைமுறை ஜூலை 1 ஆம் திகதி முதல் அமல்படுத்தப்படுத்தப்பட ஆராயப்பட்டுள்ளது என போக்குவரத்து அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலை பஸ்களில் பயணம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே, பயணச்சீட்டு விநியோகிக்கப்படும். ஆகையால், அந்தபப் பயணச்சீட்டை சாரதியால் விநியோகிக்க முடியுமா என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்றும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

## மீண்டும் நிதி கேட்க ஆணைக்குழு முஸ்தீபு

நாட்டின் பொருளாதார நிலைமை மீண்டும் நல்ல மட்டத்துக்கு வந்துள்ளது என அரச தரப்பினரால் அறிக்கை விடுக்கப்படுகின்றது. ஆகையால், தேர்தலுக்கு நிதியைக் கேட்டு மீண்டும் கோரிக்கைக் கடிதத்தை அனுப்பிவைக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கான நிதியைக் கேட்டு, அரசாங்கத்திடம் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, நிதியை விடுவிக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக திறைசேரியின் செயலாளர் ஒவ்வொரு தடவையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

அந்த அறிவுறுத்தலுக்கு அமையவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

பெற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்யவேண்டுமாயின், விசேட சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வெறும் பிரேரணையின் மூலமாக வேட்பு மனுக்களை இரத்துச் செய்ய முடியாது என்றார்.

இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பெரும்பாலான தபால் மூல வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

## தேங்காய் எண்ணெய் விலை...

தற்போது உள்நாட்டு சந்தைகளில் ஒரு தேங்காயின் விலை ரூ.120 மற்றும் ரூ.130 என அதிக விலைக்கு விற்கப்படுவதாக தேசிய நுகர்வோர் உரிமைக் காப்பக அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

தேங்காய் எண்ணெய்க்கு செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்தப்படுமாயின் ஒருபோத்தல் தேங்காய் எண்ணெய்ன் விலை 1,000 ரூபாயாக அதிகரிக்கும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு காரணங்களால் சந்தையில் தேங்காயின் விலை அதிகரிக்கிறது. தேங்காய் விலையுயர்ந்தாலும், செயற்றிறன் மிக்க விநியோகத்தால் தேங்காய் எண்ணெய் நியாயமான விலைக்கு விற்கப்படுகிறது. விநியோகத்தைத் தடை செய்து செயற்கையான தட்டுப்பாடு ஏற்படுத்துவதன் மூலம் தேங்காய் எண்ணெய் விலையை அதிகரிப்பதே இந்தக் குழுவின் நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## எய்ட்ஸால் காலாண்டில் 15 பேர் உயிரிழப்பு

2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 4,404 எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். இவ்வாண்டில் அது சுமார் 600 பேரால் அதிகரித்து 5,011 ஆக பதிவாகியுள்ளது.

அதேபோல் இவ்வருடத்தின் முதற்காலாண்டில் 3,806 ஆண்கள், 1,361 பெண்கள் நாடளாவிய ரீதியில் HIV தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட 23 ஆண்களும் மூன்று பெண்களும் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்

HIV தொற்றால் பாதிக்கப்படும் பெண்களை விட ஆண்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளமை அந்த புள்ளிவிவரத் தகவலின் மூலம் தெரியவருகிறது.

அதேவேளை மாற்றுப்பாலினத்தவர்கள் ஒன்பது பேரும் HIV தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை இனங்காணப்பட்டுள்ளனர்.

HIV தொற்றால் இதுவரையிலான காலப்பகுதியில் 15 பேர் உயிரிழந்துள்ளமையும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

## பம்பரகந்த நீர்வீழ்ச்சியில் பல்கலைக்கழக மாணவன் பலி

பெலிஹுல் ஓயா பம்பஹின்ன பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய எச். எம். ஹசங்க விக்கும் விதாரண என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஐந்து நண்பர்களுடன் பம்பரகந்த நீர்வீழ்ச்சியை பார்வையிடுவதற்காக நீராடச்சென்ற போது, ஆழமான நீர்க்குழியில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பம்பரகந்த நீர்வீழ்ச்சியை பார்வையிடுவதற்கு அனுமதிச்சீட்டு பெறாமல் மணல் வளைவில் காட்டுப்பாதையின் ஊடாக நீர்வீழ்ச்சி பகுதிக்குள் பிரவேசித்துள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## 3 சேவைகள் அத்தியாவசிய...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அதன்படி மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளுக்கும் எரிபொருள் தயாரிப்பு மற்றும் எரிபொருள் விநியோகம், வைத்தியசாலைகள் தாதியர் சேவைகள் மற்றும் பிற நிறுவனங்களின் சுகாதார பராமரிப்பு , சிகிச்சை தொடர்பான அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்ப டுத்தப்பட்டுள்ளன.

## சில பொருட்களின்...

இறக்குமதியாளர்கள் பொருட்களை அதிக விலைக்கு விற்பதாகவும் இதனால் சந்தையில் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாகவும் மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய உருளைக்கிழங்கு, உப்பு மற்றும் பருப்பு ஆகியவற்றின் மொத்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பால் பெரிய வெங்காயத்தின் விலையும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்க டொலரின் பெறுமதி குறையும் போது பொருட்களின் விலை குறையாது. ஆனால், கூடும் போதும் மட்டும், பொருட்களின் விலை அதிகரிக்கின்றது எனவும் நுகர்வோர் குற்றஞ்சாட்டினர்.

# கதிர்காமத்துக்கு பஸ் சேவை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

உகந்தை மற்றும் கதிர்காம உற்சவத்தையொட்டி, தினமும் காலை 08.00 மணிக்கு கல்முனையிலிருந்து உகந்தை மற்றும் கதிர்காமத்துக்கு இலங்கை போக்கு வரத்து சபையின் பஸ் சேவை இன்று திங்கட்கிழமை முதல் இடம்பெறவுள்ளதாக, கல்முனை சாலை முகாமையாளர் வி. ஜௌபர் தெரிவித்தார்.

உகந்தை மற்றும் கதிர்காமத்துக்குச் செல்லும் பிரயாணிகள் முன்கூட்டியே ஆசனப் பதிவை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, அக்கரைப்பற்று பஸ் நிலையத்தில் இருந்து உகந்தைக்கான பஸ் கட்டணம் 550 ரூபாய் எனவும் கதிர்காமத்துக்கான கட்டணம் 850 ரூபாய் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில்

# மாணவர் பாராளுமன்றம்





■ நிதர்சன் வினோத்

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் வெள்ளிக்கிழமை (16) மாணவர் பாராளுமன்ற அமர்வு, வித்தியாலயத்தின் அதிபர் இ. சிறிதரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இடம்பெற்றது. இதன் பொழுது, தெரிவு செய்யப்பட்ட மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களால் சபாநாயகர், பிரதி சபாநாயகர் உட்பட்ட பாராளுமன்ற பதவிகளுக்கான தெரிவு இடம்பெற்து. பாராளுமன்ற அமர்வில் மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே கருத்தாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

# கோழிச் சண்டையில் ஈடுபட்டவர்கள் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள நாவலடி பிரதேசத்தில், கோழிச் சண்டையில் சூதாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஏழு பேரை சனிக்கிழமை (17) கைது செய்ததாகவும் ஆறு சண்டைக் கோழிகள் மற்றும் பணம் என்பவற்றை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நாவலடி பிரதேசத்தைச் சேர்ந்த 26 தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# “இலட்சியம் இல்லாத வாழ்க்கை வாழ்க்கையல்ல”

■ நூருல் ஹுதா உமர்

எதிர்காலத்தில் இந்த நாட்டை வளப்படுத்துகின்ற செல்வங்களான மாணவர்களை ‘மாணவச் செல்வங்கள்’ என்று அழைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என அக்கரைப்பற்று நீதவான் /மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்,ஹம்ஸா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் சமூதாய சார் சீர்திருத்த திணைக்களத்தின் பங்களிப்புடன் நடைபெற்ற போதைப்பொருள் பாவனை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேய மாவட்ட நீதிபதி கூறினார்.

பாடசாலை அதிபர் ஏ.பீ.முஜீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதிபதி ஹம்ஸா தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனித்தனி திறமையும் ஆற்றலும், இலட்சியமும் காணப்படுகின்றன.



இவ்வாறான நிலையில் அந்த இலட்சியத்தை சிதைக்கின்ற செயற்பாடுகள் மிகக் கச்சிதமாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. எனது அனுபவத்தில் பல நீதிமன்றங்களில் மாணவர்களை சந்தேக நபர்களாக முன்னிலைப்படுத்துகின்ற போது அவர்களுடன் உரையாடியிருக்கின்றேன். அவர்களது குடும்ப நிலைமை, வறுமை, கெட்ட நண்பர்களின் சகவாசம் போன்றன அவர்களை தீய செயல்களுக்கு இட்டுச் சென்றிருப்பதை அறிய முடிந்தது.

நானும் எனது ஓ.எல் பருவத்திலும் பல இணைப்பாடவிதான செயற்பாட்டிலும், விளையாட்டுகளிலும், புறக்கிருத்திய செயற்பாட்டிலும் ஈடுபட்டிருக்கிறேன். எனது பாடசாலை காலங்களைச் சரியாகப் பயன்படுத்தியதால் இன்று உங்கள் முன் நீதிபதியாக வந்திருக்கிறேன். உங்களில் பலர் வைத்தியர்களாகவும், சட்டத்தரணிகளாகவும், பொறியியலாளர்களாகவும், ஏன் நீதிபதிகளாகக்கூட வர முடியும். அதைச் சிதைப்பதற்கு ஒரு குழுவினர் மாபியாவாக செயற்பட்டுக்கொண்டிருப்பதை, அதனால் வரும் அபாயத்தைப்பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என்றார்.

ஒவ்வொரு மாணவனும் இலட்சியமுடையவனாக இருக்க வேண்டும். இலட்சியமில்லாத ஒரு வாழ்க்கை வாழ்க்கையல்ல; ஒவ்வொருவரும் பெரும் கனவுகளை காண வேண்டும். இருக்கின்ற இலட்சியத்தை அடைவதற்கு அந்தக் கனவுகளை நனவாக்கும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் இவ்வாறான அபாயங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்றார்.

### மன்னார் மாவட்டத்தில் மானிய எரிபொருள் விநியோகத்தில்

# விடுபட்டவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்

## வடமாகாண கடற்றொழில் இணையம்

■ எஸ். றொசேரியன் லெம்பேட்




சீன அரசாங்கத்தின் மானிய எரிபொருள், தற்போது மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனினும், குறித்த மானிய எரிபொருள் விநியோகத்தின் போது விடுபட்ட, புறக்கணிக்கப்பட்ட படகு உரிமையாளர்களுக்கும் எரிபொருள் வழங்க கடற்றொழில் திணைக்களம் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வடமாகாண கடற்றொழில் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம் ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் சனிக்கிழமை (17) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

சீன அரசாங்கத்தால் வடமாகாண மீனவர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள், தற்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கமைவாக மன்னார் மாவட்டத்தில் மன்னார், முசலி, நானாட்டான் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ஊடாக மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வழங்கப்பட்டமை முதல் கட்டம் என கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும், வழங்கப்படுகின்ற எரிபொருள் உரிய மீனவர்களுக்கு, மீனவர் படகுகளுக்கு வழங்கப்படுவதாக இல்லை. பதிவு செய்யப்பட்ட படகுகளுக்கு கூட சில காரணங்களை வைத்து எரிபொருள் வழங்கப்படவில்லை. உரிய அதிகாரிகள் பதிவுகளை மேற்கொள்ளும் போது ஏற்பட்ட சிறு தவறுகள் காரணமாக, குறித்த பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதற்கு அப்பால், உப்புக்குளம் உள்ளடங்கலாக நிறைய மீனவ சங்கங்கள் எரிபொருள் விநியோக பதிவுகளில் உள்வாங்கப்படாது நிராகரிக்கப்பட்டுள்ளன. நிராகரிக்கப்பட்ட சங்கங்களின் படகுகளுக்கும் விடுபட்ட மீனவர்களின் படகு களுக்கும் தொடர்ந்து எரிபொருளை பெற்றுக்கொடுக்க கடற்றொழில் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில், வடமாகாண கடற்றொழில் இணையத்தின் பொருளாளர் அன்ரனி சங்கரும் கலந்து கொண்டிருந்தார்.

# மட்டு. மாநகர சபைக்கு புதிய ஆணையாளர் நியமனம்



■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய ஆணையாளராக நடராஜா சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் வெள்ளிக்கிழமை (16) வழங்கிவைக்கப்பட்டது.

இலங்கை நிர்வாக சேவை (தரம் -1 ) உத்தியோகத்தரான இவர், மன்னார் மாவட்ட கமநலசேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளராகவும், மட்டக்களப்பு மாவட்ட கமநலசேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளராகவும், உலக வங்கி திட்டத்தின் ‘சிமாட் கிலைமட் ஸ்ரீ லங்கா’ திட்டப் பணிப்பாளராகவும், கிழக்கு மாகாணக் கல்விப் பணிமனையின் பிரதிப் பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# சுகாதார பரிசோதகர் மீது தாக்குதல்; உரிமையாளரின் மகன் கைது

■ எம். செல்வராஜா

மீதும்பிட்டிய பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களை பசறை பொது சுகாதார பரிசோதகர்கள் விசேட சோதனைக்கு உட்படுத்திய வேளையில், பொதுச் சுகாதார பரிசோதனை உத்தியோகத்தர் ஒருவர் மீது சனிக்கிழமை (17) தாக்குதல் மேற்கொண்ட வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளரின் மகன், பசறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது; மீதும்பிட்டிய பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளை நிறைவு செய்த சந்தர்ப்பத்தில், குறித்த வர்த்தக நிலையத்தில் உள்ள களஞ்சிய அறையில், மக்களின் பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் அதனை பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் இரகசிய தகவலொன்று கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த களஞ்சிய அறையை சோதனைக்காக திறக்குமாறு சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்த நிலையில், அதற்கு மறுப்புத் தெரிவித்த வர்த்தக நிலைய உரிமையாளரின் மகன், திடீரென பொது சுகாதார அதிகாரி ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

திடீர் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சுகாதார அதிகாரி, பசறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து, சந்தேக நபர் உடனடியாக கைது செய்யப்பட்டதுடன் அவரை பசறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ள பொது சுகாதார பரிசோதக சங்கத்தினர், சந்தேக நபருக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**“ மக்களின் பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட அறையை திறக்க மறுப்புத் தெரிவித்தவர், திடீரென பொது சுகாதார அதிகாரி மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார்**

### கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களத்தால்

# பாதிக்கப்பட்ட குடும்பத்தை சந்தித்த எம்.பி

■ சண்முகம் தவசீலன்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிழவன்குளத்தில் வசிக்கும் நவரத்தினம் நவரூபன் என்பவரது வீட்டுக்கு, வியாழக்கிழமை (14) பிற்பகல் 4.30 மணியளவில் நான்கு விசேட அதிரடிப் படையினரின் துணையுடன் சென்ற வனசீவராசிகள் திணைக்களத்தினர் ஏழு பேர், நவரூபனை கைதுசெய்து கொண்டு சென்று, கட்டிவைத்து, அடித்து சித்திரவதை செய்த பின்னர், பொய்க்குற்றச் சாட்டுகளை சுமத்தி, நீதிமன்றில் முற்படுத்தி 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்க முயன்றுள்ளனர்.

எனினும், அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார். காயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நவரூபன், தற்போது கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சனிக்கிழமை (17) தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னணியின் சட்டத்தரணி காண்டீபன் உள்ளிட்டவர்கள் சந்தித்து விடயம் தொடர்பில் கலந்துரையாடினர்.

# நகைகள் திருட்டு: பெண் கைது

■ நிர்ஷன் வினோத்

நெல்லியடி, பொன் கந்தையா வீதியில் உள்ள வீடொன்றில் 8 இலட்சத்து 80,000 ரூபாய் பெறுமதியான 6.5 பவுண் நகைகள் வெள்ளிக்கிழமை (16) களவாடப்பட்டுள்ளன. அயலில் இருந்த, நட்புடன் பழகிய குடும்பத்தாலேயே குறித்த நகைகள் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

வேலை நிமித்தமாக வெளியில் சென்றிருந்த வீட்டின் உரிமையாளர், மத்தியானம் வீட்டுக்கு திரும்பி வந்த போது, நகைகள் களவாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில், நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து உடனடியாக விசாரணையில் இறங்கிய பொலிஸ் குழுவினர், ஒரு மணித்தியாலத்துக்குள் 24 வயதான பெண்ணை கைது செய்து, நகைகளையும் மீட்டனர். இப்பெண் இரண்டு பிள்ளைகளின் தாயாவார்.

# வகைதொகையின்றி பெற்றோரிடம் கறக்கும் தனியார் வகுப்புகள்

நாடளாவிய ரீதியில் தனியார் வகுப்புகளை நடத்தும் தனியார் கல்விநிலைய ஆசிரியர்களின் அல்லது பிரத்தியேக வகுப்பெடுக்கும் ஆசிரியர்களின் தரம் குறித்து கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். ஏனெனில், நாட்டின் இலவச கல்வி, தனியார் வகுப்புகளின் ஊடாக வியாபாரமாக்கப்பட்டுள்ளது.

கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, அதன் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் கூடிய போது, இந்த விடயம் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆகையால், இந்த விவகாரத்தை விரைவாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதன் ஊடாக பெற்றோரின் தலையில் சுமத்தப்படும் நிதி தொடர்பிலான பெருஞ் சுமையை குறைக்கமுடியும்.

இந்நிலையில், கல்வி பொதுத் தராதர உயர்தரத்துக்கான தனியார் வகுப்புகளை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்திருக்கும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், தனியார் வகுப்பு ஆசிரியர்கள் அமைப்புடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தரம் 1 முதல் உயர்தரம் வரையிலும் ஒவ்வொரு பாடங்களுக்கும், தனியார் வகுப்புகளை நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். பெரும்பாலான ஆசிரியர்கள் மேலே குறிப்பிட்ட பாடசாலை வகைகளில் கற்பிப்போர் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஒருசிலர் மட்டுமே, தனியார் வகுப்புகளை நடத்துகின்றனர். அந்தளவுக்கு 'டியூசன்' மோகம் சமூகத்தில் வியாபித்து நிற்கின்றது. கற்பித்துக் கொடுப்பதில் சிறந்த பாடசாலையென கருதப்படும் பாடசாலைகளில் பயிலுவோரும், 'டியூசன்' மோகத்துக்குள் விழுந்துவிடுகின்றனர்.

தரம்-1 முதல் உயர்தர வகுப்பு வரையிலும் கற்கும் மாணவர்கள், தனியார் வகுப்புகளுக்கு படையெடுத்துவிடுகின்றர். அப்படியென்றால், பாடசாலைகளில் உரிய முறையில் கற்பிக்கவில்லை; அல்லது, மாணவர்கள் விளங்கிக்கொள்ளும் அளவுக்கு நேரமில்லை என்பதே அர்த்தமாகும்.

தனியார் வகுப்புகளை ஒழுங்குபடுத்தும் முறையொன்று காணப்படவில்லை என்பதால், மாதமொன்றுக்கு பல மில்லியன் ரூபாய் வருமானம் பெறும் அளவுக்கு, தனியார் கல்வி நடவடிக்கைகள் வியாபாரமாகியுள்ளதை சுட்டிக்காட்டவேண்டும்.

4,000 இற்கும் அதிகமான தனியார் வகுப்புகளை நடத்துபவர்கள் இலங்கையில் உள்ளனர். அவர்களுக்கான அமைப்புகளும் காணப்படுகின்றன. அவர்களுடன் கலந்துரையாடி தனியார் வகுப்புகளை ஒழுங்குபடுத்தும் முறையொன்றை உருவாக்குவதற்கு எதிர்பார்ப்பதாக சுரேன் ராகவன் சுட்டிக்காட்டினார்.

தனியார் வகுப்புகளை நடத்துபவர்களின் கல்வித் தகைமை, அவர்களுக்கு உள்ள உளத்தகைமை, கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் தொடர்பான விவரங்கள், துறைசார் அறிவு, புதிய பாடத்திட்டதில் இருக்கும் அனுபவம் என்பன தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தனியார் வகுப்புகள் நடத்தப்படும் இடங்களின் வசதிகள் தொடர்பில் ஆராயப்பட உள்ளதுடன், பாதுகாப்பு, சுகாதார வசதிகள், தளபாட வசதிகள் உள்ளிட்டவை தொடர்பிலும் கண்காணிக்கப்படவுள்ளது.

இதனை ஒரு சில தரங்களுக்கு மட்டுமே வரையறுக்காமல், சகல தரங்களுக்கும், சகல வகையான தனியார் வகுப்புகளும் நடைமுறைப்படுத்தி அவற்றின் மீதும் கவனம் செலுத்துவது உசிதமானதாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

காலம் வந்ததும் காலன் வருவான் என்று கூறுவதுண்டு. எவரும் தொடர்ந்து உலகில் வாழமுடியாது. கண்ணை மூடினால், எதுவும் தெரியாது. இறப்பைப் பற்றிக் கலவரப்படுவதில் என்ன பிரயோசனம்?

கண்முன்னாலேயே மானிட வாழ்வின் நிலையாமை பற்றித் தெரியவில்லையா? எனினும், அநேகர் மமதை, அறியாமையால் வாழ்வு நிரந்தரம் என்று நம்புகின்றார்கள். சின்ன நோய் வந்தாலும் பயந்து போய் விடுகின்றார்கள்.

நோய் வந்த பின்னர்தான் கடவுள் ஞாபகமும் வந்துவிடுகின்றது. கடவுள் மரணத்தை மறுப்பதில்லை. ஆனால், அவர் காலன் அல்ல! புதிதுபுதிதாக உலகம் வளர, உருவாக மரணம் தேவைப்படுகின்றது.
அச்சம் என்பது மகிழ்ச்சிக்கு எதிரி. எனவே, வாழும்வரை முழுமையாக வாழுங்கள். பயம், பலவீனம், சந்தேகங்களைக் களைக. என்றும் எப்போதும் துணிவுடன் வாழ்க!

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# மீளாச் செலவு வழுவும் இனப்பிரச்சினைக்கான தீர்வும்



என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக, அதாவது மாகாண சபைகளுக்கு பகிரப்பட்டுள்ள அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தால் பிடுங்கப்படாதவாறான முழுமையான அமல்ப்படுத்தல் வேண்டும் என்ற ரீதியில், முன்னாள் வடமாகாண சபை முதலமைச்சர் சீ.வீ விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் முன்மொழிவு செய்துள்ளார். இந்தச் செய்திக்கு, பலவாறான எதிர்வினைகள் தமிழர்களிடம் எழுந்துள்ளன. அதில் மேவி நிற்கும் எதிர்வினை, 13ஆம் திருத்தத்துக்காகவா, தமிழர்கள் இத்தனையை இழந்தார்கள் என்ற உணர்ச்சிவசப்பட்ட நிலையாகும்.

உணர்ச்சிவசப்பட்ட நிலைக்கு அப்பால், பகுத்தறிந்து சிந்திப்பதுதான் அறிவார்ந்த செயலாகும். அதற்காக உணர்ச்சி வசப்படுதலே பிழை என்று அர்த்தமல்ல. உணர்ச்சிகள் இயல்பானவை. ஆனால், அன்றாட வாழ்வில் கூட, நாம் உணர்ச்சிகள் காட்டும் வழியிலேயே பயணிப்பதில்லையே! ஆனால், 13ஆம் திருத்தத்துக்காகவே தமிழர்கள் இத்தனையை இழந்தோம் என்ற உணர்ச்சிவசப்பட்ட எதிர்வினையில், உணர்வு சார்ந்த நியாயங்கள் இருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

எதுவித திட்டங்களோ, அரசியல் நேர்மையோ இல்லாமல் இயலாமையின் வெளிப்பாடான உணர்வெழுச்சிப் பகட்டாரவாரமாக 'வட்டுக்கோட்டைத் தீர்மானம்' கொண்டுவரப்பட்டு, அது சாத்தியமென 'தளபதி'களால் மக்கள் நம்பவைக்கப்பட்டு, இளைஞர்கள் ஆயுதமெடுத்து, இன்று ஓர் இனம் நான்கு தசாப்தங்களைத் தொலைத்துவிட்டு, நிர்க்கதியாக நிற்கிறது என்று சொன்னால், அந்த நான்கு தசாப்தகால இழப்பிற்கு ஏதாவது நியாயம் வேண்டாமா என்ற சிந்தனையில், உணர்வுரீதியான நியாயங்கள் இல்லாமல் இல்லை.

'வட்டுக்கோட்டைத் தீர்மானம்' நமக்கானதொரு விடிவொன்றைத் தரும்; அதை அடைந்துவிட முடியும் என்று நம்பவைக்கப்பட்ட எத்தனை இளைஞர்கள், தமது உயிரை தமது இனத்துக்காக ஆகுதியாக்கி இருக்கிறார்கள். அவர்களது தியாகத்துக்கு ஏதாவது நியாயம் வேண்டாமா என்ற சிந்தனையில், உணர்வுரீதியான நியாயங்கள் இல்லாமல் இல்லை. ஆனால், கடந்ததை எண்ணி, நிகழ்வதையும் நிகழப்போவதையும் மறந்துவிட முடியுமா என்பது, உணர்வுகளைத் தாண்டி அறிவுபூர்வமாகச் சிந்திக்க வேண்டிய விடயம்.

மேற்சொன்ன இழப்புகளைப் பற்றியும், 13ஆம் திருத்தத்துக்காகவா தமிழர்கள் இத்தனையை இழந்தார்கள் என்ற கேள்வியைப் பற்றியும் யோசிக்கையில், பொருளியலில் பேசப்படும் 'மீளாச் செலவு' பற்றி சிந்திக்க வேண்டியதாகிறது.

பேராசிரியர் கொலின் ட்ரூறி, மீளாச் செலவுகளை 'கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட முடிவால் உருவாக்கப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் எடுக்கப்படும் எந்த முடிவாலும் மாற்ற முடியாத செலவுகள்' என்று வரையறுக்கிறார்.

பொருளியலில் மீளாச் செலவு என்பது ஏற்கெனவே ஏற்பட்டுள்ள மற்றும் திரும்பப் பெற முடியாத செலவைச் சுட்டுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மீளாச் செலவு என்பது கடந்த காலத்தில் செலுத்தப்பட்ட தொகையாகும். இது எதிர்காலம் பற்றிய முடிவுகளுக்கு இனிப் பொருந்தாது.

ஆனால், இது பகுத்தறிந்து யோசித்தால் மட்டும்தான் புலப்படும். இதனால்தான் பொதுவில் மக்கள் இந்த மீளாச்செலவை எதிர்கால முடிவுகளுக்கும் பயன்படுத்திக்கொள்ளும் தன்மையை நாம் அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது. இதனை மீளாச் செலவு வழு (sunk cost fallacy) என்று குறிப்பிடுவார்கள்.

மீளாச் செலவு வழு என்றால், ஏற்கெனவே முதலீடு செய்யப்பட்ட வளங்கள், மீட்க முடியாதவை மற்றும் வீணடிக்கப்படக்கூடாது என்ற நம்பிக்கையில் இருந்து இந்த வழு எழுகிறது. இது பகுத்தறிவற்ற முடிவெடுக்க வழிவகுக்கிறது.

இதற்கு ஓர் எளிமையான உதாரணம், ஒருவரோடு பத்துவருடம் வாழ்ந்துவிட்டோம் என்ற காரணத்துக்காகவே, ஒரு மோசமான உறவைத் தொடர்வது. இந்த உறவை விட்டுவிட்டால், கடந்த பத்து வருடங்கள் இந்த உறவுக்காக செலவளித்த காலம் வீணாகிவிடும் என்ற சிந்தனை.

ஆனால், பகுத்தறிந்து யோசித்துப் பார்த்தால், செலவான பத்து வருடம் செலவானதுதான்; அதனை மீட்டெடுக்க முடியாது. பத்து வருடம் வீணாகிட்டது என்பதற்காக, இன்னொரு பத்து வருடத்தையோ, இருபது வருடத்தையோ வீணடிப்பது என்பது எவ்வளவு அபத்தமானது. இதுதான் மீளாச் செலவு வழு. இந்த மீளாச் செலவு வழு என்பது, பொருளியலில் மட்டுமல்ல, நாம் எமது அன்றாட வாழ்விலும் விடும் பெருந்தவறாகும். அரசியலிலும் நாம் அதனையே செய்து கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு தமிழ் மக்களுக்குத் தேவையான அரசியல் ரீதியாகப் பாடுபடுவதை விட்டுவிட்டு, 30 வருடங்கள், ஒரு நோக்கத்துக்காக நிறைய இழந்திருக்கிறோம். அந்த இழப்புகளும் தியாகங்களும் வீணாகிவிடக்கூடாது என்ற நோக்கத்துக்காக அரசியல் செய்வது என்பது வழுவானது; பகுத்தறிவுக்கு முரணாணது.

இனப்பிரச்சினை பற்றிப் பேசும்போது, மீளாச் செலவு வழுவானது, இனப்பிரச்சினையை நிலைநிறுத்துவதற்கும் மேலும் தீவிரப்படுத்துவதற்கும் கணிசமான பங்கை வகிக்க கூடியதொன்றாக அமைகிறது. இன மோதல்கள் பெரும்பாலும் வரலாற்றுக் குறைகள், ஆழமான வேரூன்றிய பகைமைகள் மற்றும் இரு தரப்பிலும் உள்ள உரிமை பறிபட்ட பாதிக்கப்பட்ட நிலை ஆகியவற்றிலிருந்து எழுகின்றன.

இத்தகைய இன முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ள தரப்பினர், தமது அரசியல் அடைவுகளுக்காக கணிசமானவற்றை முதலீடு செய்திருக்கலாம். அதாவது இழந்த உயிர்கள், உட்கட்டமைப்பு இழப்பு, மற்றும் அவர்களின் காரணத்துக்கான உணர்ச்சிபூர்வமான இணைப்புகள் போன்ற உறுதியான மற்றும் அருவமான நிறைய விடயங்கள் தமது அரசியல் அடைவுகளுக்காகத் தியாகம் செய்யப்பட்டிருக்கலாம்.

மீளாச் செலவு வழு என்பது முரண்பாடான தரப்பினரை தொடர்ந்து சண்டையிட அல்லது நல்லிணக்க முயற்சிகளை எதிர்க்க வழிவகுப்பதாக அமையும். ஏனெனில், அவர்கள் ஏற்கெனவே மோதலில் உயிர்கள் மற்றும் குறிப்பிடத்தக்க வளங்களை இழந்துள்ளனர். மோதலை கைவிடுவது அல்லது சமரசம் செய்வது அவர்களின் கடந்த கால தியாகங்களை அர்த்தமற்றதாக்கும் என்று அவர்கள் நம்பலாம்.

இன மோதல்களில் ஈடுபட்டுள்ள கட்சிகள் மீளாச் செலவு வழுவின் காரணமாக தமது இறுதி நோக்கத்தைத் தவிர்ந்த வேறு சமரசத்தை எதிர்க்கலாம். சலுகைகள் அல்லது சமரசங்களை ஏற்றுக்கொள்வது தோல்வியை ஒப்புக்கொள்வது அல்லது முந்தைய இழப்புகளை வீணடிப்பது என்பதாக அவர்கள் உணரலாம். இதனால் அமைதியான தீர்மானங்களுக்கான சாத்தியக்கூறுகள் தடைபடும்.

மீளாச் செலவு வழு என்பது மோதலுடன் உணர்ச்சிப்பூர்வமான பற்றை உருவாக்கி, இழப்புகளிலிருந்து பெறப்பட்ட அடையாளம் மற்றும் அந்த இழப்புகளுக்கு காரணமான நோக்கத்தின் உணர்வை ஆழமாக்குகிறது. இந்த உணர்வுபூர்வமான பற்று, விட்டுக்கொடுப்புகளுக்கு அல்லது சமரசம் தொடர்பிலான ஆக்கபூர்வமான உரையாடலில் ஈடுபடுவதற்கும் முட்டுக்கட்டையாக இருக்கிறது.

இந்த இடத்தில், தமிழ் மக்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். 'மீளாச் செலவு வழு' தமிழ் மக்களுக்கு மட்டும் உரியதல்ல. சிங்கள மக்களும் இதே மனநிலையில் இருக்கிறார்கள். எமது இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்து தமது உயிரையும் உடலையும் தியாகம் செய்து யுத்தத்தை வென்றது, தமிழ் மக்களுக்கு சமஷ்டியை வழங்கத்தானா என்று அவர்களும் 'மீளாச் செலவு வழு' மனநிலையில் சிந்திக்கலாம். இருதரப்பும் இப்படிச் சிந்தித்தால், தீர்வு என்பது ஒருபோதும் வராது. அரசியல்வாதிகள் தொடர்ந்தும் அரசியல் செய்து கொண்டிருக்கலாம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றி யோசிக்க வேண்டுமானால், இரு தரப்பும் நிறைய விட்டுக்கொடுப்புகளுக்குத் தயாராக வேண்டும். பிரச்சினையில் ஈடுபட்டுள்ள தரப்புகள், தங்கள் இலக்குகள் மற்றும் நோக்கங்களை விமர்சன ரீதியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

கடந்த கால முதலீடுகளின் அடிப்படையில் மட்டுமே, இலக்குகளைத் தொடர்வதன் பகுத்தறிவற்ற தன்மையை ஏற்றுக்கொள்வது, மற்றும் எதிர்காலத்துக்கான சாத்தியமான பலன்களில் கவனம் செலுத்துவது என்பன முக்கியமானவை.

மேலும், மீளாச் செலவு வழுவைத் தவிர்க்க பிரச்சினையை தொடர்வதற்கான சந்தர்ப்பச் செலவுகளை கருத்தில் எடுப்பது ஒரு பயனுள்ள உத்தியாக இருக்கும். மோதல்கள் இல்லாத நிலையில் உணரக்கூடிய வளர்ச்சி மற்றும் செழிப்புக்கான வளங்கள் வீணடிக்கப்பட்டமை, இழந்த உயிர்கள் மற்றும் தவறவிட்ட வாய்ப்புகள் குறித்து கட்சிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

இனியும் அப்படியான அழிவு வேண்டுமா என்பதை இருதரப்பும் யோசிக்க வேண்டும். நம்பிக்கையை கட்டியெழுப்புதல் மற்றும் முரண்பட்ட குழுக்களிடையே உறவுகளை வளர்ப்பது, மீளாச் செலவு வழுவுடன் தொடர்புடைய உணர்ச்சிகரமான பற்றை எதிர்கொள்ள உதவும்.

பரஸ்பர புரிதல், பச்சாத்தாபம் மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம், கட்சிகள் படிப்படியாக நல்லிணக்கத்தை நோக்கி செயற்பட முடியும். சாவதற்கு இளைஞர்களை உசுப்பேத்த முடியுமென்றால், அவர்களை சிறப்பாக வாழ்வதற்கு உசுப்பேத்த அரசியல்கட்சிகளால் முடியும். அதனை அவர்கள் செய்வார்களா என்பதுதான் கேள்வி.

கடந்த கால முதலீடுகள் எதிர்கால முடிவுகளைத் தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்தை மறுப்பதன் மூலம், முரண்பட்ட தரப்பினர் பகிரப்பட்ட நலன்கள், நீண்ட கால நன்மைகள் மற்றும் நிலையான தீர்வுகளை நோக்கி தங்கள் கவனத்தை மாற்ற முடியும்.

இல்லை, நாம் மீளாச் செலவு வழுவோடுதான் வாழ்வோம் என்று ஓர் இனம் எண்ணுமேயானால், அவ்வினத்தை இறைவனால்கூட உய்விக்க முடியாது.

## கடிதங்கள்

### நுவரெலியா தபால் நிலையத்தை அழிக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு

இலங்கையில் வரலாற்று சிறப்பு மிக்க இடங்களில் காணப்படும் நிலங்கள், பாரம்பரிய பழைமையான கட்டடங்கள் என்பன ஆக்கிரமிப்புக்கும் தனியார் மயப்படுத்தலுக்கும் உள்ளாகி, படிப்படியாக அழிக்கப்பட்டு வருவது, கடந்த காலங்களில் நடந்தேறி உள்ளன.

அந்தவகையில், 'சின்ன இங்கிலாந்து' என விரும்பத்துடன் அழைக்கப்படும் நுவரெலியாவில், பிரிட்டிஷாரால் அமைக்கப்பட்ட மத்திய தபால் நிலையம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் நிலை தோன்றியுள்ளது.

நுவரெலியாவின் குறியீட்டுச் சின்னமாக விளங்கும் பிரதான தபால் நிலையத்தை, வெளி நாட்டவர்களுக்கான சுற்றுலா உணவக விடுதியாக மாற்றும் அரசாங்கத்தின் யோசனையை, அதை அழிக்கும் முயற்சியாகவே பார்க்கப்படவேண்டும்.

நுவரெலியாவில் இயங்கும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஒன்றிணைந்த தபால் ஊழியர் முன்னணி, தபால் மற்றும் தொலைத்தொடர்பு உத்தியோகஸ்தர்களின் சங்கம் உட்பட பொது அமைப்புகள் பல, இந்த யோசனைக்கான எதிர்ப்பை பதாகைகள் ஊடாக வெளிக்காட்டியுள்ளனர்.

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ள நுவரெலியா பிரதான தபால் நிலையத்தைப் பார்வையிட வருவோர், வாழ்த்து அட்டைகளையும் ஓர் அடையாளமாக தமது உறவுகளுக்கு அனுப்புகின்றமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியாவின் விலைமதிப்பற்ற வளமாக கருதப்பட்ட நுவரெலியா தபால் நிலையத்தை, தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கும் பொருட்டே மேற்குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் திட்டம் கைவிடப்பட்டு, அரசியல் மற்றும் வியாபார நோக்கமின்றி நுவரெலியாவை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கை, அக்கறையுள்ள பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்படுகின்றது.

ஆ. ரமேஸ்



# UiPath Automations சிறப்பு விருதுகள் 2022 இல் SLT-MOBITEL க்கு கௌரவிப்பு

SLT-MOBITEL, அண்மையில் இடம்பெற்ற UiPath Automation சிறப்பு விருதுகள் 2022 நிகழ்வில் கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டது. தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக இலங்கையில் Automation சிறப்பு பிரிவில் இந்த விருது வழங்கப்பட்டிருந்தது.

நான்காவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு மெய்நிகர் நிகழ்வாக, Economic Times உடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டது. இந்தியா மற்றும் தெற்காசிய பிராந்தியத்தில் மாற்றியமைப்பு automation செயற்றிட்டங்களினூடாக தொழிற்றுறைசார் சிறப்பை எய்தியிருந்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் இந்நிகழ்வு அமைந்திருந்தது.




பரந்தளவு வியாபாரச் செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தும் பல்வேறு automation களை SLT-MOBITEL நடைமுறைப்படுத்தியிருந்தது. UiPath RPA (Robotic Process Automation) ஐயும் பயன்படுத்தி, செயலாற்றி இந்தப் பிரிவில் சிறந்த நிலையை கொண்டுள்ளது. இந்தச் செயற்பாடுகளில் கடன் கட்டுப்பாடு மற்றும் வருமான உறுதிப்படுத்தல் கட்டமைப்பு விருதை சுவீகரித்திருந்தது.

இந்தக் கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் SLT-MOBITEL இன் குழும பிரதம அதிகாரி (தகவல் மற்றும் டிஜிட்டல்) திலக் கமலத் கருத்துத் தெரிவிக்கையில், "தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாகவும் UiPath இடமிருந்து இந்த விருதை பெற்றுக் கொள்கின்றமை தொடர்பில் பெருமை கொள்கின்றோம். புத்தாக்கமான automation தீர்வுகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதில் எமது அணியினர் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர். அதனூடாக நிறுவனசார் வினைத்திறனை கட்டியெழுப்ப முடியும் என்பதுடன், வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும். சிறந்த செயற்பாடுகளுக்கு இந்த விருது முன்மாதிரியாக அமைந்திருப்பதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தகவல் தொடர்பாடல் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கான எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகின்றது" என்றார்.

UiPath Automation சிறப்பு விருதுகள் 2022 இல் SLT-MOBITEL பெற்றுக் கொண்ட கௌரவிப்பினூடாக, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் துறையில் அதன் தலைமை நிலை மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. செயற்பாட்டு சிறப்பை வழங்கி, வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தும் புதிய automation செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு நிறுவனம் தன்னை அர்ப்பணித்துள்ளது.



# செலான் வங்கியின் நிதி முகாமைத்துவ கற்கை நிகழ்வு

சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்கு சாதகமான சூழலை உருவாக்கும் அதேவேளை, இலங்கையின் பொருளாதாரத்துக்கு பக்கபலமாக இருப்பதற்கான தனது சளைக்காத அர்ப்பணிப்பை வலியுறுத்தி நிதி முகாமைத்துவ கற்கை நிகழ்வை திவுலபிட்டிய நகரில் அண்மையில் செலான் வங்கி ஏற்பாடு செய்திருந்தது.

100 க்கு மேற்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வணிகத் தொழில் முயற்சியாளர்கள் தனிச்சிறப்பான நிபுணர் குழுவொன்று வழங்கிய உள்விடயங்களின் பயனைப் பெற்றுக்கொண்டனர். இக்குழுவில் SME வணிக ஆலோசகரும், முகாமைத்துவப் பட்டப்பின் கற்கை நிறுவகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வருகைதரும் பீட அங்கத்தவருமான பேராசிரியர் ரவி பமுனுசிங்க, இலங்கை வயம்ப பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் விஷ்வஜித் கந்தேகம, செலான் வங்கியின் மீள்நிதிச்சேவை சிரேஷ்ட முகாமையாளர் செஹான் கன்னங்கர, செலான் வங்கியின் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தரன கோரளே ஆரச்சி ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வு நிச்சயமாக அவர்களுக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம். தொழில் முயற்சியாளர்கள் தமது வணிகங்களை அபிவிருத்தி செய்து, விஸ்தரிப்பதற்கு உதவும் பலதரப்பட்ட முக்கிய விடயங்கள் பற்றிய தெளிவு பெற்றுத் தரப்பட்டதோடு, டிஜிட்டல் சந்தைப்படுத்தலின் முக்கியத்துவம் பற்றியும் விசேடமாக வலியுறுத்தப்பட்டது.

முழு உலகமும் விற்பனையை அதிகரிப்பதற்காக டிஜிட்டல் சந்தைப்படுத்தலுக்கு நகர்ந்து வருவதால், உறுதியான சமூக ஊடக மூலோபாயம் மற்றும் டிஜிட்டல் கருவிகளின் செயற்றிறன்மிக்க முகாமைத்துவம் என்பவற்றின் அத்தியாவசிய பங்களிப்பு பற்றி உரையாடலில் ஆராயப்பட்டது.

இதன்போது தொழில் முயற்சியாளர்கள் ஆர்வத்தை உருவாக்கல், பற்றிப்பிடித்தல் மற்றும் வளர்த்தல் ஆகிய படிகளின் ஊடாக தமது ஒன்லைன் இருப்பை மேம்படுத்தக்கூடிய பெறுமதியான உள்விடயங்கள் மற்றும் யதார்த்தமான அணுகுமுறைகளை அறிந்து கொண்டனர்.

இவற்றுக்கு மேலதிகமாக, நிபுணர் குழுவினர் செயற்றிறன்மிக்க நிதியியல் முகாமைத்துவ வழிமுறைகள், புதிய சந்தைகளை ஊடுருவுவதற்கான பரிசீலிக்கப்பட்ட மூலோபாயங்கள் மற்றும் உலகளாவிய பாவனையாளர்களுக்கு வெற்றிகரமாக உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல் என்பன பற்றிய தெளிவையும் பெற்றுக் கொடுத்தனர். இதன்போது அநேகமான சிறிய நடுத்தர வியாபாரங்களின் வங்கியாளர் தெரிவாகவுள்ள செலான், ஒரு வங்கியாக மீள்நிதி கடன்களுக்கான ஒதுக்கம் மற்றும் அவர்களது குறிப்பான தேவைகளுக்காக கட்டமைக்கப்பட்டுள்ள பல்வேறு கடன் திட்டங்களின் வரிசை என்பவை பற்றி விளக்கமளித்து இத்துறைக்கு ஒத்துழைப்பு வழங்குவதிலுள்ள தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தியது. நிதி ஒத்துழைப்பை பெற்றுத்தருவதன் ஊடாக, தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து, இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் வாய்ப்புகளை அவர்கள் தவறவிடாமல் தொடர்ந்து வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு வழி செய்வதே வங்கியின் நோக்கமாகும்.

தேசத்தின் சிறிய நடுத்தர வியாபாரப் பிரிவுக்கு ஊக்கமளிப்பது பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் என்பதில் செலான் வங்கி நம்பிக்கை கொண்டுள்ளது. இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதத்திற்கு கணிசமானளவு பங்களிப்பை வழங்கக்கூடிய சாத்தியத்தை சிறிய நடுத்தர வியாபாரங்கள் கொண்டிருப்பதால், அனைவருக்கும் சௌபாக்கியமிக்க நாடொன்றை உறுதி செய்வதில் அர்ப்பணிப்பு கொண்டுள்ளது.

# 9ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள்



கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், அதன் கலாசாரப் பிரிவான கொழும்பு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் என்பன ஏற்பாடு செய்திருந்த யோகா தின நிகழ்வுகள், கொழும்பு-07 சுதந்திர சதுக்கத்தில், சனிக்கிழமை (17) இடம்பெற்றன.







# பேண்ட் வாத்தியத்தில் மிக்கேல் கல்லூரி முதலாம் இடம்



மட்டக்களப்பு கல்வி வலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மேற்கத்திய பேண்ட் வாத்திய போட்டி-2023 சனிக்கிழமை (17) பிற்பகல் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலாம் இடத்தை புனித மிக்கேல் கல்லூரி பெற்றுக்கொண்டுள்ளதுடன் பாடசாலை பேண்ட் வாத்தியக்குழுக்களுக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

க. விஜயரெத்தினம்




# முதலுதவி பயிற்சிப்பட்டறை





செனா். ஜோன் அம்பியூலன்ஸ் சிறிலங்கா அமைப்பால் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் முதலுதவி அறிமுகத்துடன் அமைந்த முதலுதவிப் பயிற்சிப்பட்டறை மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (18) வழங்கப்பட்டது. பாடசாலையின் அதிபர் யூ.எல் நஸார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொறியியலாளர் எம்.ரீ கமால் நிசாத் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்து, மாணவர்கள் பயன்பெறும் வகையில் கருத்துகளை வழங்கினார். இந்நிகழ்வில் வளவாளர்களாக செனா். ஜோன் அம்பியூலன்ஸ் சிறிலங்கா அமைப்பின் அம்பாறை மாவட்ட ஆணையாளரான கெப்டன் எம்.ரீ நௌஸாத் வபி மற்றும் உதவி ஆணையாளரான மேஜர் கே.எம் தமீம் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு முதலுதவிப் பயிற்சிகளை வழங்கினர்.

எம்.எஸ்.எம்ஸாகிர்

# பயிற்சிப் பட்டறை







முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில் சுவீடனை தலைமையகமாக் கொண்ட டயகோனியா நிறுவன அனுசரனையில் 'சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பகிரும்போது ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் ஒன்றிணைதல்' எனும் தொனிப்பொருளில் தமிழ்மொழி மூல ஒரு நாள் பயிற்சி பட்டறை, மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் சனிக்கிழமை (17) நடைபெற்றது. அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சமூகம், சமயம், அரசியல் மற்றும் ஏனைய சமூக ஊடகங்களில் தங்களது கருத்துகளைப் பகிர்ந்துவரும் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர் என ஆண்கள், பெண்கள் பங்குபற்றுனர்களாக கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியான நிகழ்வுகளில் வளவாளராக பணியாற்றும் கலாநிதி எம்.சி றஸ்மின் வளவாளராகவும் 'விடிவெள்ளி' பத்திரிகை ஆசிரியர் எம்.பி.எம் பைறூஸ் துணை வளவாளராகவும் கலந்து பங்கேற்றிருந்தனர். இந்நிகழ்வுக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா தலைமை தாங்கினார்.

நூருல் ஹுதா உமர்

# நந்தினிக்கு வைர நெக்லஸை பரிசளித்த நடிகர் விஜய்

10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் தொகுதி வாரியாக முதல் மூன்று மதிப்பெண்களை பெற்ற மாணவ- மாணவிகளுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



சென்னை நீலாங்கரையில் உள்ள ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில் நடைபெறும் நிகழ்ச்சியில், 1700 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

விஜய் பேசுகையில், உங்கள் குணத்தை நீங்கள் இழந்துவிட்டால் அனைத்தையும் இழந்து விடுவீர்கள், நம் விரலை வைத்து நமது கண்ணை குத்தும் செயல் தான் தேர்தல், நாளைய வாக்காளர்களான நீங்கள் சரியான தலைவர்களை தேர்வு செய்ய வேண்டும். மாணவர்கள் அம்பேத்கரைப் படிக்க வேண்டும், பெரியாரைப் படிக்க வேண்டும், காமராஜரைப் படிக்க வேண்டும் என பேசினார்.

இந்நிலையில், 600க்கு 600 மதிப்பெண்கள் பெற்ற நந்தினிக்கு சான்றிதழுடன் வைர நெக்லஸ் பரிசாக வழங்கப்பட்டது.

ஜய்பூர்

## பையில் சிசுவின் சடலம்: பஸ்ஸில் பயணித்த தந்தை




மனைவிக்கு ஆண் குழந்தையொன்று பிறந்துள்ளது. குழந்தை பலவீனமாக இறந்து விட்டது. உடலை எடுத்துச்செல்வதற்கு ஆஸ்பத்திரி நிர்வாகம் அமரர் ஊர்தி இல்லையென கூறிவிட்டது. அதனையடுத்தே அந்த சிசுவை, தந்தை தனது மஞ்சள் பையில் வைத்து, பஸ்ஸில் எடுத்துச் சென்றுள்ளார். தின்தோரி மாவட்டத்தில் இடம்பெற்ற இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குவாலியர்

## கணவனின் அந்தரங்க உறுப்பு வெந்தது

தன்னுடைய அலைபேசியை பறித்தமையால், கணவனின் அந்தரங்க உறுப்பில் கொதிக்கும் எண்ணெயை அவரது மனைவி ஊற்றிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



மத்திய பிரதேசம் குவாலியர் கம்பம் காவல் நிலையத்துக்கு உட்பட்ட மாதவி நகரைச் சேர்ந்தவர் டாக்காவில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

சில நாட்களுக்கு முன்பு நாடு திரும்பியவரிடம் பக்கத்து வீட்டுப் பெண்ணொருவர் உங்கள் மனைவி என் கணவருடன் நீண்ட நேரம் பேசுகிறார் என்று புகார் அளித்தார்.


இதுபற்றி மனைவியிடம் விசாரித்த போது, நான் பேசவில்லை என்று கூறியுள்ளார். சமீபத்தில், அந்த இளைஞனிடம் அலைபேசியில் மனைவி நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். மனைவியை எச்சரித்தார் ஆனால் மனைவி கேட்கவில்லை. இதனால் வெறுப்படைந்த அவர், மனைவியின் அலைபேசியை எடுத்து வைத்துக்கொண்டார்.

இரவு 2 மணியளவில் கணவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து உள்ளார். இதை எதிர்பார்த்து காத்திருந்த மனைவி, எழுந்து சமையலறையில் எண்ணெயை சூடாக்கி கணவனின் அந்தரங்க பகுதியில் ஊற்றினார். இதில் அந்த பகுதி 70 சதவீதம் எரிந்துள்ளது. இதையடுத்து மனைவி வீட்டை விட்டு ஓடிவிட்டார்.

ராஜஸ்தான்

மகனின் சிகிச்சைக்காக

## மின்னுயர்த்திக்குள் ஸ்கூட்டரில் சென்ற தந்தை



ராஜஸ்தானின் கோட்டா மாவட்டத்தில் எம்.பி.எஸ். மருத்துவமனைக்கு வழக்கறிஞர் ஒருவர் தனது ஸ்கூட்டரில் சென்று உள்ளார்.

அவரது மகன் காயமடைந்த நிலையில், சிகிச்சை அளிப்பதற்காக ஸ்கூட்டரில் நேராக மின்னுயர்த்திக்குள் சென்று உள்ளார்.

இதுபற்றி மருத்துவமனை நிர்வாகத்தின் துணை கண்காணிப்பாளர் கருத்துரைக்கும் போது, ஸ்கூட்டரை வாசல் பகுதி வரை செல்லவே அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது. ஆனால், அவர் மருத்துவமனையின் மின்னுயர்த்திக்குள் தனது மகனுடன் ஸ்கூட்டரை ஓட்டி சென்றுள்ளார் என தெரிவித்து உள்ளார்.

சென்னை:

## கழிவுநீர் தொட்டியில் இறக்கினால் 5 ஆண்டு சிறை

கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்ய பணியாளர்களை கழிவுநீர் தொட்டிக்குள் இறக்கினால் 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும். விதிகளை மீறினால் கழிவுநீர் லாரிகள் பறிமுதல் செய்யப்படும் என்று நகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.



மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில்புரிவோர் கழிவுநீர் தொட்டியை இயந்திரங்களை கொண்டு மட்டுமே சுத்தம் செய்ய வேண்டும். இச்சட்டப்படி எந்த ஒரு நபரோ, உள்ளாட்சி அமைப்போ அல்லது எந்த ஒரு நிறுவனமோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்த ஒரு பணியாளரையும் அபாயகரமான கழிவுநீர் கட்டமைப்புகள் அல்லது கழிவுநீர் தொட்டிகள் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்தக்கூடாது.

இதை மீறுவோர் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கழிவுநீர் கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் சேகரிப்பு தொட்டியை சுத்தம் செய்யும்போது உயிரிழப்பு ஏற்பட்டால் அப்பணியில் ஈடுபடுத்திய உரிமையாளர் அல்லது ஒப்பந்ததாரர் அல்லது பணியில் அமர்த்தியவர் மீதும் சட்டம் பாயும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா கால்பந்தாட்ட சம்மேளனத் தொடர்:

# றேஞ்சர்ஸ் சம்பியன்

கியாஸ் ஷாபி



கிண்ணியா கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட வெற்றிக் கிண்ணத் தொடரில் றேஞ்சர்ஸ் சம்பியனானது.

கிண்ணியா பிரதேசத்தில் இருந்து 36 அணிகள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டியானது குறிஞ்சாக்கேணி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் 2-1 என்ற கோல் கணக்கில் முகம்மதியாவை வென்றே றேஞ்சர்ஸ் சம்பியனானது.

இத்தொடரின் நாயகனாக றேஞ்சர்ஸின் முகம்மது கிப்னியும், சிறந்த கோல் காப்பாளராக அதேயணியின் முகம்மது பெனோஸும் தெரிவு செய்யப்பட்டதோடு, சிறந்த நன்னடத்தை அணியாக முகம்மதியாவும் தெரிவு செய்யப்பட்டது.

சம்பியனான றேஞ்சர்ஸுக்கு 50,000 ரூபாய் பணப்பரிசும் கேடயமும் வழங்கி வைக்கப்பட்டதோடு, முகம்மதியாவுக்கு 30,000 ரூபாய் பணப்பரிசும் கேடயமும் வழங்கி வைக்கப்பட்டது.

கிப்னி, பெனோஸ், முகம்மதியாவுக்கு தலா 5,000 ரூபாய் பணப்பரிசும் கேடயமும் வழங்கி வைக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானுக்கெதிரான தொடரில்

## பங்களாதேஷ் குழாமுக்குத் திரும்பிய நைம், அஃபிஃப்


ஆப்கானிஸ்தானுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான பங்களாதேஷ் குழாமில் மொஹமட் நைம், அஃபிஃப் ஹொஸைன் ஆகியோர் மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலஇயில் இக்குழாமில் யாஸிர் அலி, மிருத்துன்ஜோய் சௌத்ரி, றொனி தலுக்கர் ஆகியோர் இடம்பெறவில்லை.



குழாம்: தமிம் இக்பால் (அணித்தலைவர்), லிட்டன் தாஸ், நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, ஷகிப் அல் ஹஸன், முஷ்பிக்கூர் ரஹீம், தௌஹிட் ஹிரிடோய், மெஹிடி ஹஸன் மிராஸ், தஜியுல் இஸ்லாம், தஸ்கின் அஹ்மட், எபொடொட் ஹொஸைன், முஸ்தபிசூர் ரஹ்மான், ஹஸன் மஹ்மூட், ஷொரிஃபுல் இஸ்லாம், அஃபிஃப் ஹொஸைன், மொஹமட் நைம்.

## றோமாவில் தொடரும் ஸ்மோலிங்க்



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான றோமாவின் பின்களவீரரான கிறிஸ் ஸ்மோலிங்க், அக்கழகத்துடன் புதிய இரண்டாண்டு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார்.

றோமாவுடனான 33 வயதான ஸ்மோலிங்க் முன்னைய ஒப்பந்தமானது அடுத்த மாதம் முடிவடைவதாகக் காணப்பட்டிருந்தது.

## யுனைட்டெட்டிலிருந்து வெளியேறும் டி கியா?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் கோல் காப்பாளர் டேவிட் டி கியா, தனது இறுதிப் போட்டியை கழகத்துக்காக விளையாடி விட்டாரா என அக்கழகம் சந்தேகிப்பதாகக் கூறப்படுகிறது.

டி கியா தனது ஒப்பந்தத்தை நீடிப்பதை நெருங்கியிருந்ததாக கழகம் நம்பியபோதும் ஒப்பந்த பேச்சுக்கள் நீண்டு கொண்டு செல்வதால் அவர் இப்பருவகாலத்தில் கழகத்தை விட்டு வெளியேறலாமென அச்சமேற்பட்டுள்ளது.



## மியூனிக்குச் செல்லும் வோக்கர்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் பின்களவீரரான கைல் வோக்கரைக் கைச்சாத்திடும் பொருட்டு அவருடன் பேச்சுவார்த்தைகளில் ஜேர்மனிய புண்டெஸ்லிகா கழகமான பயேர்ண் மியூனிச் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சிற்றியுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தை வோக்கர் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கான்பரா:

## பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானேன்

பாராளுமன்றத்தின் சக்தி வாய்ந்த நபரால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானதாக ஆஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் லிடியா தோர்ப். கூறியுள்ளது அந்நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




சக எம்.பி.யான டேவிட் வான் மீது பாலியல் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார்.

பாராளுமன்ற அவையில் கண்ணீர் மல்க பேசிய லிடியா " அவர் படிக்கட்டில் தள்ளி என்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார். இதே போன்ற நிகழ்வு இங்கு பலருக்கும் நடந்துள்ளது. அவர்கள் தங்கள் பணிக்காக இதனை வெளியே கூறாமல் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அவர் செய்தது அவமானமான செயல், அவரைப் பதவியிலிருந்து பிரதமர் நீக்க வேண்டும் " என்றார்.

பீட்டர்ஸ்பர்க்

## போர் முடிவுக்கு வரவேண்டும்

உக்ரேன் மற்றும் ரஷியாவுக்கு இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வரும் பணியின் ஒரு பகுதியாக, ஆப்பிரிக்க அமைதி இயக்கம் என்ற பெயரிலான நடவடிக்கையை தென்னாப்பிரிக்க அரசு மேற்கொண்டு வருகிறது.



இதன்படி, ரஷியாவின் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்கு தென்னாப்பிரிக்க ஜனாதிபதி சிரில் ராமபோசா ஆப்பிரிக்க நாட்டு தலைவர்கள் 7 பேர் அடங்கிய குழுவினர் உடன் சென்றுள்ளனர்.

இந்த பயணத்தில் அவர், ரஷிய ஜனாதிபதி புட்டினை நேரில் சந்தித்து பேசினார். அப்போது அவரிடம் ராமபோசா கூறும்போது, இந்த போரானது முடிவுக்கு வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்..

ஆப்பிரிக்க கண்டத்தில் இந்த போரால் எதிர்மறை தாக்கம் ஏற்பட்டு உள்ளது. உண்மையில், உலகம் முழுவதும் பல நாடுகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது என அவர் கூறியுள்ளார்.

ஜியாங்சு

## மனைவியின் மனிதாபிமான செயலை பாருங்கள்

கடந்த 3 ஆண்டுகளாக கோமா நிலையில் இருந்த கணவர், இயல்பு நிலைக்கு திரும்பியதால் சமூக இணையதள விளம்பரம் மூலம் கிடைத்த ரூ.21 இலட்சம் நன்கொடையை திருப்பி அளிக்க சீனப் பெண் முடிவு செய்துள்ளார்.



கிழக்கு சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் வசிப்பவர் ஜியாங் லீ. கடந்த 2020-ம் ஆண்டு நடந்த கார் விபத்தில், கோமா நிலைக்கு சென்றார். அவரை, அவரது மனைவி உடனிருந்து கவனித்து வந்தார்.

மருத்துவ செலவினங்களுக்கு சேமிப்பு பணம் முழுவதும் காலியானது. இதனால் சமூக இணையதளம் மூலம் தனது கணவரின் நிலையை எடுத்துக் கூறி நிதி திரட்டினார் . மொத்தம் 4,055 நன்கொடையாளர்கள் நிதியுதவி செய்ததில் ரூ.21 லட்சம் நன்கொடை கிடைத்தது.

ஜியாங் லீ மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பும் வாய்ப்புகள் மிகக் குறைவு என மருத்துவர்கள் தெரிவித்த போதிலும், தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளார் ஜியாங் லீ.

இத்தகவலை சமூக இணையதளத்தில் தெரிவித்துள்ள டிங், நன்கொடை அளித்தவர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு, அவர் பெற்ற நன்கொடைகளை திரும்ப செலுத்தும் முடிவையும் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து

இங்கிலாந்தில் மன்னரின் பிறந்த நாளில்

## இந்தியர்களுக்கும் சிறப்பு விருது

இங்கிலாந்து மன்னர் 3-ம் சார்லஸ் நவம்பர் மாதம் 14-ந் திகதி தனது 75-வது பிறந்த நாளை கொண்டாடுகிறார். அவர் மன்னராக முடிசூட்டிக் கொண்ட பிறகு கொண்டாடும் முதல் பிறந்த நாள் இதுவாகும்.



எனவே மன்னரின் பிறந்த நாளை கோலாகலமாக கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் மன்னரின் பிறந்தநாளை முன்னிட்டு மருத்துவம் உள்பட பல்வேறு துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியவர்களுக்கு விருது வழங்கி கௌரவிப்பது வழக்கமாக உள்ளது.

அந்த வகையில் இந்த ஆண்டு விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டவர்களின் பட்டியலை இங்கிலாந்து அரசு வெளியிட்டுள்ளது.

இந்த பட்டியலில் மொத்தம் ஆயிரத்து 171 பேர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இதில், இந்திய வம்சாவளி டொக்டர்கள் தொழிலதிபர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் 40-க்கும் மேற்பட்டோர் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**“ அவர் மன்னராக முடிசூட்டிக் கொண்ட பிறகு கொண்டாடும் முதல் பிறந்த நாள் இதுவாகும்**

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 19 ஜூன் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.